# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் I பரீட்சை – 2023 சனவரி**

## *(101)* நிதிக் கணக்கீடு

---

**பகுதி A**

**வினா இல 01** – 40 புள்ளிகள்

**(கட்டாய வினா)**

வினா இலக்கம் 1.1 இலிருந்து 1.10 வரை மிகச் சரியான விடையினது இலக்கத்தை தெரிவுசெய்து எழுதுமாறு பரீட்சார்த்திகளை வேண்டப்பட்டுள்ளது. தரப்பட்ட கூற்றுக்கள் சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுமாறு வினா இலக்கம் 1.11 தொடக்கம் 1.15 வரை கேட்கப்பட்டுள்ளது. மற்றும் வினா இலக்கம் 1.16 தொடக்கம் 1.20 வலை குறுகிய விடையினை வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பின்வருவன பரீட்சார்த்திகளால் ஒவ்வொரு உப பிரிவிற்கும் வழங்கப்பட்ட விடைகளில் விடப்பட்ட பொதுவான தவறுகளாகும்.

**வினா இல 1.1**

இது கணக்கீட்டு வெளியீடு என்றால் என்ன என்பது பற்றி வினவப்பட்டதாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடை இலக்கம் 3 இனை தெரிவுசெய்துள்ளனர். ஆனால் சில பரீட்சார்திகள் பேரேட்டு கணக்கு மற்றும் பரீட்சை மீதியினை சரியான விடையாக தெரிவு செய்துள்ளனர்.

**வினா இல 1.2**

நிறுவனமொன்றினால் பின்பற்றப்படும் இருப்பு மதிப்பீட்டு முறை மீதான கணக்கீட்டுக் கொள்கையை காலப்போக்கில் மாற்றக்கூடாது எனும் கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கருவை குறிப்பிடுமாறு வினவப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மாறாமை எண்ணக்கருவை சரியான விடையாக வழங்கியுள்ளனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் சரியான விடைக்கு பதிலாக தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவை சரியான விடையாக தெரிவு செய்துள்ளனர்.

**வினா இல 1.3**

தரப்பட்ட தகவல்களின் படி, குறைந்து செல்லும் மீதி முறைப்படி 31 மார்ச் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுமானத் தேய்வினை குறைந்து செல்லும் மீதி முறையில் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் வினா தொடர்பான போதிய விளக்கமின்மை காரணமாக விடை இலக்கம் 02 இற்கு பதிலாக விடை இலக்கம் 01 இனை சரியான விடையாக தெரிவுசெய்துள்ளனர்.

**வினா இல 1.4**

தரப்பட்ட கணக்கீட்டு சமன்பாட்டின் மீதான சரியான தாக்கத்தை வினவப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் விடை இலக்கம் 03 இற்கு பதிலாக விடை இலக்கம் 02 இனை சரியான விடையாக தெரிவுசெய்துள்ளனர். ஏனெனில் கணக்கீட்டு சமன்பாட்டின் மீதான இரட்டைப்பதிவின் விளைவினை சரியாக விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

**வினா இல 1.5**

கொடுக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி 31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுக் கட்டுப்பாட்டு கணக்கு (காசுப் புத்தகம்) மீதியினை கணிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் வங்கி இணக்க கூற்றினை தயாரிப்பது தொடர்பான போதிய விளக்கமின்மை காரணமாக விடை இலக்கம் 04 இற்கு பதிலாக விடை இலக்கம் 01 மற்றும் 02 இனை சரியான விடையாக தெரிவுசெய்துள்ளனர்.

**வினா இல 1.6**

தரப்பட்ட விடயங்களில் நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தக்கூடியவற்றை அடையாளம் காணுமாறு வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடை இலக்கம் 02 இனை சரியாக வழங்கியிருந்தனர். ஆனால் சில மாணவர்கள் முற்கொடுப்பனவுக் கணக்கு எனும் சரியான விடைக்கு பதிலாக விற்பனைக் கணக்கினை தெரிவு செய்துள்ளனர்.

**வினா இல 1.7**

பரீட்சார்திகளின் கணக்கீட்டு எண்ணக்கரு தொடர்பான அறிவு சோதிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களும் சரியான விடை 02 இனை தெரிவுசெய்துள்ளனர்.

**வினா இல 1.8**

வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் பொருள்களைப் பதிவு செய்வதற்கு களஞ்சியக் காப்பாளரால் தயாரிக்கப்படும் மூல ஆவணம் பற்றி வினவப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடை இலக்கம் 02 இனை சரியாக வழங்கியிருந்தனர். ஆனால் சில மாணவர்கள் விடை இலக்கம் 02 இற்கு பதிலாக விடை இலக்கம் 03 இனை சரியான விடையாக தெரிவுசெய்துள்ளனர்.

**வினா இல 1.9**

தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 31 மார்ச் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபத்தை கணிப்பிடுமாறு வேண்டப்பட்டுள்ளது. சில மாணவர்கள் இலாபக் கணிப்பீடு தொடர்பாக போதிய அறிவின்மை காரணமாக விடை இலக்கம் 01, 02 மற்றும் 03 இனை சரியான விடையாக தெரிவுசெய்துள்ளனர். இருப்பினும் பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையினை வழங்கியுள்ளனர்.

**வினா இல 1.10**

வணிகத்தை விரிவாக்குவதற்கு பெற்றுக்கொண்ட வங்கிக் கடன் ரூ. 1,750,000 இற்கான மூலதன மீள்கொடுப்பனவினை பேரேட்டுக் கணக்குகளில் பதிவுசெய்வது பற்றி வினவப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரட்டைப்பதிவு தொடர்பான குறைந்த விளக்கம் காரணமாக சரியான விடை இலக்கம் 02 இற்கு பதிலாக விடை இலக்கம் 03 மற்றும் 04 இனை தெரிவுசெய்துள்ளனர்.

கீழே 1.11 தொடக்கம் 1.15 வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடுமாறு வேண்டப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட பொதுவான தவறுகள் பின்வருமாறு

**வினா இல 1.11**

தரப்பட்ட கூற்று தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கரு பற்றிய சரியான விளக்கமின்மை காரணமாக சில பரீட்சார்திகள் சரியான விடையாக "தவறு" என்பதற்கு பதிலாக "சரி" எனக் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை வழங்கியுள்ளனர்.

**வினா இல 1.12**

பொது நாட்குறிப்பேட்டில் பதிவுசெய்யப்பட்ட நடவடிக்கை மீதான கூற்றொன்று தரப்பட்டுள்ளது. தரப்பட்ட கூற்று தொடர்பான போதிய விளக்கமின்மை காரணமாக சில பரீட்சார்திகள் சரியான விடையாக "தவறு" என்பதற்கு பதிலாக "சரி" எனக் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை வழங்கியுள்ளனர்.

**வினா இல 1.13**

கொள்வனவுக் கணக்கானது பெயரளவுக்கணக்கிற்கு ஒரு உதாரணமாகும். இது கணக்கீட்டு வெளியீடு என்றால் என்ன என்பது பற்றி வினவப்பட்டதாகும். தரப்பட்ட கூற்று தொடர்பான போதிய விளக்கமின்மை காரணமாக சில பரீட்சார்திகள் சரியான விடையாக "சரி" என்பதற்கு பதிலாக "தவறு" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**வினா இல 1.14**

சிறு செலவுக் காசுக் கட்டு நிதி மீதான கூற்றொன்று தரப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட கூற்றினை சரியாக விளங்கிக்கொண்டு சரியான விடையாக "சரி" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**வினா இல 1.15**

ஒரு பொறுப்புக் கணக்கு மீதியானது வழமையாக ஒரு செலவு மீதியாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட கூற்றினை சரியாக விளங்கிக்கொண்டு சரியான விடையாக "தவறு" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இலக்கம் 1.16 தொடக்கம் 1.20 வரையான வினாக்கள் விடைப்புத்தகத்தில் விடையினை எழுதுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**வினா இல 1.16**

உரிமையாண்மை எனும் பதத்தை விளக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. இதற்கு அனைத்து மாணவர்களும் பூரண வரைவிலக்கணத்தை வழங்க தவறியுள்ளனர். வழங்கப்பட்ட விடைகள் முழுமையற்றது. இருப்பினும் சில பரீட்சார்த்திகள் சரியான வரைவிலக்கணத்தை குறிப்பிட்டுள்ளனர்.

**வினா இல 1.17**

“நிதிக் கணக்கீடு” மற்றும் “முகாமைக் கணக்கீடு” ஆகியவற்றிற்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளை இனங்காணுமாறு பரீட்சார்திகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்திகள் வேறுபாடுகளை தெளிவாக இனங்கண்டு சரியான விடையினை வழங்கியுள்ளனர்.

**வினா இல 1.18**

வணிக ஒழுக்கநெறி என்பதால் கருதப்படுவது யாதென சுருக்கமாக விபரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தெளிவான மற்றும் சரியான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை. சில பரீட்சார்திகள் இவ்வினாவிற்கு விடையளித்திருக்கவில்லை.

**வினா இல 1.19.**

விசேடத்துவமான கணக்கீட்டு மென்பொருளுக்கான இரண்டு உதாரணங்களை நிரற்படுத்துமாறு வேண்டப்பட்டிருந்தது. விசேடத்துவமான கணக்கீட்டு மென்பொருள் தொடர்பான போதுமான குறைந்த விளக்கத்தின் காரணமாக, பெரும்பாலான பரீட்சார்த்திகள் பொதுவான நோக்கத்திற்கு பயன்படுத்தும் மென்பொருள்களை விடையாக குறிப்பிட்டுள்ளனர்.

உதாரணம் - Accpack, Quick Book, MYOB.

**வினா இல 1.20**

முதன்மைப் பதிவேடுகளை பேணுவதன் இரண்டு (02) முக்கியத்துவங்கள் சோதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையினை வழங்கியிருந்தனர்.

## <u>பகுதி B</u>

**வினா இல 02 – 10** புள்ளிகள்

(கட்டாய வினாக்கள்)

இவ்வினாவானது பேரேட்டு கணக்குகளை தயாரித்த பின்னர் பரீட்சை மீதியினை தயாரிப்பது தொடர்பான தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவினை சோதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் செயற்றிறன் நன்றாக இருந்தது.

(1) பரீட்சை மீதியினை தயாரிப்பதற்கு பதிலாக சில பரீட்சார்த்திகள் பேரேட்டுக் கணக்குகளை மாத்திரம் தயாரித்திருந்தனர்.

(2) பரீட்சை மீதியில் வரவிலிடப்பட வேண்டிய மீதிகள் செலவிலும் செலவிலிடப்படவேண்டிய மீதிகள் வரவிலும் காட்டப்பட்டிருந்தன.

(3) கடன் விற்பனை மற்றும் கடன் கொள்வனவுகள் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் சரியாக பதியப்பட்டிருக்கவில்லை.

(4) காசு விற்பனை, கடன் விற்பனை, காசுக் கொள்வனவு மற்றும் கடன் கொள்வனவு என்பன தனிப்பட்ட விடயங்களாக பரீட்சை மீதியில் பதியப்பட்டிருந்தன.

(5) 01 ஜனவரி 2022 இல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்துக்கான 3 மாதங்களுக்கான பெறுமானத் தேய்வு 25% அல் சரியாக கணிப்பிட்டிருக்கவில்லை.

(6) இயந்திரத்திற்கான பெறுமானத் தேய்வு இயந்திர பெறுமானத்திலிருந்து கழிக்கப்பட்டு தேறிய பெறுமதி பரீட்சை மீதியில் பதியப்பட்டிருந்தமை.

(7) பின்வரும் குறைபாடுகள் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கை தயாரிக்கும் போது பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகளிலிருந்து அவதானிக்க முடிந்தது.

**வினா இல 03** – 10 புள்ளிகள்

(கட்டாய வினாக்கள்)

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உற்பத்திக் கிரயக் கூற்றினை (உற்பத்திக் கணக்கு) தயாரிப்பது தொடர்பான மாணவர்களின் அறிவு மற்றும் விளக்கங்களை இவ்வினா சோதித்துள்ளது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு திருப்திகரமாக விடையளித்திருந்ததுடன் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது:

(1) சரியான சட்டகத்தை பயன்படுத்தியிருக்கவில்லை

(2) புத்துருவாகும் வேலையினை உற்பத்திக்கிரயத்துடன் சீராக்குவதை விடுத்து மூலக்கிரயத்துடன் சீராக்கப்பட்டிருந்தமை.

(3) நேர்கூலிகள் நேரடி செலவுகளின் கீழ் சீராக்கப்பட வேண்டியிருப்பினும் சில பரீட்சார்திகள் அவற்றை மேந்தலைக் கிரயமாக காட்டியிருந்தனர்

(4) தொழிற்சாலை மற்றும் அலுவலகங்களுக்கிடையிலான கிரய ஒதுக்கீட்டிற்கான மேந்தலைக் கணிப்பீடு கொடுக்கப்பட்ட வீதாசாரத்திற்கமைய சரியாக கணிப்பிடப்படவில்லை.

(5) ஆரம்ப மூலப்பொருள் மற்றும் இறுதி மூலப்பொருள் தவறாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

(6) உற்பத்திக் கிரயத்தின் மீது 25% இலாப எல்லை கணிப்பிடப்படவில்லை.

(7) ‘‘மூலப்பொருள் நுகர்வு’’, ‘‘மூலக்கிரயம்’’ மற்றும் ‘‘மொத்த உற்பத்திக் கிரயம்’’ போன்ற பதங்கள் கணிப்பிடப்பட்ட பெறுமதிக்கெதிராக எழுதப்படவில்லை.

**வினா இல 04** – 10 புள்ளிகள்

(கட்டாய வினாக்கள்)

இவ்வினா பகுதி **(A)** மற்றும் பகுதி **(B)** என இரு பிரிவுகளைக் கொண்டது.

பகுதி **(A)** இல் தரப்பட்ட 1 தொடக்கம் 5 வரை இலக்கமிடப்பட்ட கணக்கீட்டு சமன்பாடுகளுக்கு சாத்தியப்படக்கூடிய நடவடிக்கைகளை இனங்கண்டு குறிப்பிடுவது தொடர்பான மாணவர்களின் அறிவினையும் பகுதி **(B)** இல் சீராக்கப்பட்ட காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கினை தயாரிப்பது மற்றும் 31 மார்ச் 2022 இலுள்ளவாறான வங்கிக் கணக்கிணக்க கூற்றினை தயாரித்தல் தொடர்பான அறிவினையும் சோதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் செயற்றிறன் சிறப்பாக இருந்தது.

**(A)** இலக்கம் 1 தொடக்கம் 5 வரை கொடுக்கப்பட்ட கணக்கீட்டு சமன்பாடுகள் தொடர்பான சாத்தியமான பல நடவடிக்கைகளை பரீட்சார்த்திகள் இனங்கண்டு சரியான விடையினை வழங்கியிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் நடவடிக்கை இல 01 இனை காசு முதலீடு எனக் குறிப்பிட்டிருக்கவில்லை. நடவடிக்கை இல 03 மற்றும் 04 இல் கடன் கொள்வனவு மற்றும் கடன் விற்பனை தொடர்பான நடவடிக்கைகளை குறிப்பிடும் போது கடன் நிபந்தனை எனும் பதத்தை குறிப்பிட்டிருக்கவில்லை.

**(B)**

**(a)** சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கினை தயாரிக்கும் பொழுது மாணவர்களால் வழங்கப்பட்ட விடைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்க முடிந்தது.

(1) காசுப்புத்தகத்தில் மட்டும் சீராக்கக்கூடிய ஊடுசெயல்களை கவனத்தில் கொள்ளாது அனைத்து ஊடுசெயல்களும் காசுப்புத்தகத்தில் சீராக்கப்பட்டுள்ளன.

(2) கணக்கில் செலவிலிடக்கூடிய ஊடுசெயல்களை வரவிலும் வரவில் பதியவேண்டிய ஊடுசெயல்களை செலவிலும் பதிந்துள்ளமை.

(3) காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கின் ஆரம்ப மீதியானது வரவில் பதிய வேண்டியிருப்பினும் சில பரீட்சார்த்திகளால் செலவிடப்பட வேண்டும்.

(4) காசுக்கணக்கின் ஆரம்பமீதி காசுப்புத்தகத்ததிற்குள் கொண்டுவரப்படவில்லை.

(5) காசுப்புத்தகத்தின் இறுதி மீதியானது சரியாக சமப்படுத்தப்படவில்லை மற்றும் இறுதிமீதி எடுக்கப்படவில்லை.

**(b)** வங்கிக் கணக்கிணக்க கூற்றினை தயாரிப்பதில் பரீட்சார்திகளால் வழங்கப்பட்ட விடைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்க முடிந்தது.:

(1) வங்கி கணக்கிணக்க கூற்றில் மட்டும் உள்ளடக்கக்கூடிய அடையாளம் காணாது அனைத்து நடவடிக்கைகளையும் வங்கிக் கணக்கிணக்க கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது.

(2) சில பரீட்சார்த்திகள் வங்கிக் கணக்கிணக்க கூற்றினை சீராக்கப்பட்ட காசேட்டிலிருந்து ஆரம்பித்து வங்கிக்கூற்று மீதியினை பெற்றிருந்த போதிலும், ஏனைய சிலர் வங்கிக்கூற்று மீதியிலிருந்து வங்கிக் கணக்கிணக்க கூற்றினை ஆரம்பித்து சீராக்கப்பட்ட காசேட்டு மீதிக்கு கொண்டுவந்துள்ளனர். இவ்விரு சந்தர்ப்பங்களிலும் சில மாணவர்கள் கூட்டப்பட வேண்டிய விடயங்களை கழித்தும் கழிக்கப்பட வெண்டிய விடயங்களை கூட்டியும் தயாரித்துள்ளனர்.

**வினா இல 05** – 10 புள்ளிகள்

(கட்டாய வினாக்கள்)

இவ்வினா பகுதி **(A)** மற்றும் பகுதி **(B)** என இரு பிரிவுகளைக் கொண்டது. பகுதி **(A)** இல் உள்ள வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை தயாரிப்பது மற்றும் அதற்கமைய தொங்கல் கணக்கினை தயாரித்தல் மற்று் பகுதி **(B)** இல் தரப்பட்ட விடயங்களை பயன்படுத்தி 2022 ஏப்ரல் மாதத்திற்கான வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கினை தயாரிப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெரும்பாலான பரீட்சார்திகள் திருப்திகரமாக விடையளித்திருந்த போதிலும் பின்வரும் குறைபாடுகள் மற்றும் தவறுகள் பொருவாக இனங்காணப்பட்டுள்ளன.

**(A) (a)**

(1) சிலர் நாட்குறிப்பு பதிவுகளுக்கு பதிலாக பேரேட்டு கணக்குகளை தயாரித்துள்ளனர்.

(2) நாட்குறிப்புப் பதிவினை எழுதும் போது நாட்குறிப்புப் பதிவு தொடர்பான வரவு மற்றும் செலவுப் பெறுமதிகள் மாற்றம் செய்யப்பட்டள்ளன.

(3) நாட்குறிப்புப் பதிவுகளை எழுதும் போது வரவு மற்றும் செலவு என்பன ஊடுசெயல்களுக்கெதிராக குறிப்பிடப்படவில்லை.

(4) அடையாளங்காணப்படாத வழுக்கள் தொங்கல் கணக்கினூடாக திருத்தப்பட்டிருந்தமை

(5) வாடகை வருமானக் கணக்கில் செலவில் பதியப்பட்ட வாடைகை செலவினுடைய திருத்தம் தொடர்பாக சரியான விளக்கமின்மை காரணமாக வாடகை வருமானக் கணக்கில் அல்லது வாடகைச் செலவுக்கணக்கில் மட்டும் பதியப்பட்டுள்ளமை.

(6) விடய இலக்கம் 4 இற்கமைய, தொலைபேசிச் செலவு ரூ. 65,000 சரியாகக் காசுப்புத்தகத்தில் பதியப்பட்டிருந்த போதிலும், தொலைபேசிச் செலவுக் கணக்கில் ரூ. 56,000 எனப் பதியப்பட்டிருந்தது. இதை சரிசெய்ய, ரூ.9,000 வேறுபாடு சரியாக பதிவிடப்படாமை மற்றும் நாட்குறிப்புப் பதிவு குறிப்பிடப்படவில்லை.

(**b**) சீராக்கப்பட்ட தேறிய இலாபக் கணிப்பீட்டில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(1) தொங்கல் கணக்கின் ஆரம்ப செலவு மீதியானது வரவுப்பக்கத்தில் பதியப்பட்டிருந்தமை மற்றும் வேறு சிலரின் தொங்கல்கணக்கின் செலவு மீதி பதியப்படாமலும் இருந்தது.

(2) தொங்கல் கணக்கில் வரவிடப்படவேண்டிய பதிவுகள் செலவில் பதியப்பட்டிருந்ததோடு செலவிடப்படவேண்டிய பதிவுகள் வரவிலும் பதியப்பட்டிருந்தது.

**(B)** தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி 2022 ஏப்ரல் மாதத்திற்கான வியாபார கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கினை தயாரிக்கும் போது பரீட்சார்த்திகளால் விடப்பட்ட தவறுகள் மற்றும் விடுபாடுகள் பின்வருமாறு:

(1) 01 ஏப்ரல் 2022 இல் உள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோர் கணக்கின் ஆரம்ப மீதியானது கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(2) 01 ஏப்ரல் 2022 இல் உள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோர் கணக்கின் ஆரம்ப மீதியானது கணக்கில் செலவிடப்பட்டுள்ளது.

(3) வரவுப் பதிவுகள் செலவுப் பக்கத்திலும் செலவுப்பகுதிகள் கணக்கின் வரவுப்பகுதியிலும் பதியப்பட்டிருந்தமை

(4) காசு விற்பனையும் கணக்கில் செலவிடப்பட்டிருந்தமை.

(5) ஐயக்கடன் கணக்கினை தயாரிக்கும் போது மாதத்தில் இடம்பெற்ற மொத்த நாட்பதிவு விற்பனை மற்றும் விற்பனைத்திரும்பல் நாட்பதிவு என்பன கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(6) கணக்கினை சமப்படுத்திய பின்னர் இறுதி மீதி கணிப்பிடப்படவில்லை.

## <u>பகுதி C</u>

**வினா இல. 06** - 20 புள்ளிகள்
(கட்டாய வினா)

இவ்வினா **(a)** மற்றும் **(b)** என இரு பகுதிகளைக் கொண்டது. பகுதி **(a)** இல் முற்றடக்கவருமானக் கூற்றினை தயாரிப்பதில் மாணவர்கள் கொண்டுள்ள அறிவினையும் பகுதி **(b)** இல் நிதிநிலைக் கூற்றினை தயாரிப்பது தொடர்பாக சோதிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த செயல்திறன் திருப்திகரமாகவுள்ளது.

பொதுவாக அவதானிக்கப்பட்ட தவறுகள் மற்றும் குறைபாடுகள் பின்வருமாறு:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றினை முன்னிலைப்படுத்தல்:**

(1) வருடத்திற்கான சரியான பெறுமானத்தேய்வுப் பெறுமதி கணிப்பிடப்பட்டு வருமானக் கூற்றில் பதியப்படவில்லை

(2) செலுத்தவேண்டிய மின்சாரம் மற்றும் முற்செலுத்தப்பட்ட தண்ணீர் செலவு என்பன வருடத்திற்கான செலவினைக் கணிப்பிடும்போது கருத்தில் கொள்ளப்படவில்லை.

(3) முற்றடக்க வருமானக் கூற்றில் காட்டப்படவேண்டிய விடயங்கள் தொடர்பான குறைந்த விளக்கத்தின் காரணமாக நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய சில விடயங்கள் முற்றடக்க வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

(4) வருடத்திற்காக பதிவழிக்கப்பட்ட ஐயக்கடன் ரூ. 75,000 பதிவுசெய்யப்படவில்லை.

(5) மொத்த இலாபத்தை கணிப்பிடும் போது சில பரீட்சார்த்திகள், ஆரம்ப இருப்பினைக் கழித்து இறுதி இருப்பினை கூட்டியுள்ளனர்.

(6) முற்றடக்க வருமானக் கூற்றில் பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஆயிரத்திலும் சீராக்கங்களுடன் தொடர்புடைய விடையங்களை சாதாரண இலக்கங்களிலும் பதிவுசெய்துள்ளனர்.

(7) 2022 ஜனவரி 01ம் திகதி வணிகத்துக்கு இற்கு மாற்றப்பட்ட விநியோக வாகனம் மீதான 3 மாதங்களுக்கான தேய்மானம் வருமானக் கூற்றிற்கு கொண்டுசெல்லப்படவில்லை.

(8) புரிந்துரைக்கப்பட்ட கட்டமைப்பில் முற்றடக்க வருமானக் கூற்று முன்னிலைப்படுத்தப்படவில்லை.

(9) 31 மார்ச் 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வணிகத்தின் பெயருடன் முற்றடக்க வருமானக் கூற்று எனும் பதம் குறிப்பிடப்படவில்லை.

*(10)* 2022 மார்ச் மாதத்திற்கான வங்கிக்கடன் வட்டி ரூ. 100,000 கடன் வட்டி கணக்கிற்கு சேர்க்கப்படவில்லை மற்றும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(b) நிதிநிலைக் கூற்றினை தயாரித்தல்:**

(1) நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான அடிப்படை அறிவு குறைபாட்டின் காரணமாக, கொள்வனவு, விற்பனை, ஆரம்ப இருப்பு, வாடகை வருமானம், ஏனைய செலவுகள் என்பன நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(2) செலுத்தவேண்டிய மின்சாரம் மற்றும் முற்செலுத்தப்பட்ட தண்ணீர் செலவு என்பன நடைமுறைச் சொத்து மற்றும் நடைமுறைப் பொறுப்பாக நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

(3) வருடத்திற்கான ஐயக்கடன் ரூ. 75,000 வியாபார வருமதிகளிலிருந்து சரியாக பதிவழிக்கப்படவில்லை

(4) 2022 ஜனவரி 01ம் திகதி வணிகத்துக்கு ரூ.2,000,000 இற்கு மாற்றப்பட்ட அமலுக்கு சொந்தமான மோட்டார் லொறி நிதிநிலைக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

(5) வருடத்திற்கான பெறுமானத் தேய்வு திரண்ட தேய்மானத்திற்கு பதிலாக நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

(6) சில பரீட்சார்த்திகள் நிதிநிலைக் கூற்றிலுள்ள விடையங்களை வகைப்படுத்தி காட்டாது அனைத்து விடையங்களையும் ஒன்றாக காட்டியுள்ளனர்.

உதாரணம் - நடைமுறையல்லா சொத்து, நடைமுறைச்சொத்து, உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள், நடைமுறைப் பொறுப்புக்கள், ஏனையவை.

(7) வியாபார வருமதிகள் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும் வியாபார சென்மதிகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழும் காட்டப்பட்டுள்ளன.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும். புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனம் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், நாட்குறிப்பேடுகளைப் படிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காண்பதுடன் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாக வெளிப்படுத்தவும்.

**(7)** அதிகளவான கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(8)** உங்களது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தவும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிக்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் முனைப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -